*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை-4*
*02 01 2026 FRIDAY 12 40 PM*
*ஆகாஷவாணி - செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

1. தமிழகத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று சென்னை வந்துள்ளார்.

2. சுதந்திர போராட்ட தியாகியும், சமூக சீர்திருத்தவாதியுமான மன்னத்து பத்மநாபன் பிறந்தநாளையொட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி மரியாதை செலுத்தியுள்ளார்.

3. மருந்து தயாரிப்புக்கான, சர்வதேச தர வரிசைப் பட்டியலில் இந்தியா 8வது இடத்திற்கு முன்னேறி சாதனை படைத்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

4. பண்டைக்கால நாகரீகங்களிலிருந்து நவீன காலத்திற்கு ஏற்றவாறு இந்தியா முன்னேறி வருவதாக வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

5. வதோதரா சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Prada Pawar இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக இன்று சென்னை வந்த குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணனுக்கு விமான நிலையத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்டோர் விமான நிலையத்தில் அவரை வரவேற்றனர்.

பின்னர், காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையையும் குடியரசு துணைத்தலைவர் ஏற்றுக் கொண்டார்.

>>>>>><<<<<<

சுதந்திர போராட்ட தியாகியும், சமூக சீர்திருத்தவாதியுமான மன்னத்து பத்மநாபன் பிறந்தநாளையொட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி மரியாதை செலுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், கண்ணியம், சமத்துவம் மற்றும் சமூக சீர்திருத்தம் ஆகியவற்றின் மூலமே உண்மையான முன்னேற்றத்தை எட்ட முடியும் என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தவர் மன்னத்து பத்மநாபன் என்று குறிப்பிட்டுள்ளார்.

கல்வி, சுகாதாரம், மகளிருக்கு அதிகாரமளித்தல் போன்றவற்றுக்கான அவரது முயற்சிகள் எப்போதும் ஊக்கமளிக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இரக்கம் மற்றும் நல்லிணக்கத்துடன் கூடிய சமுதாயத்தை உருவாக்க அவரது சிந்தனைகள் நாட்டு மக்களுக்கு எப்போதும் வழிகாட்டும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள பதிவில், சிறந்த தேசபக்தரான மன்னத்து பத்மநாபன், சமுதாயத்தின் உயரிய நற்பண்புகளை வலுப்படுத்துவதற்காக வாழ்நாளை அர்ப்பணித்துக் கொண்டவர் என்று தெரிவித்துள்ளார்.

அவரது செயல்பாடுகள் ஒன்றிணைந்த மற்றும் வலிமையான இந்தியாவை உருவாக்க நமக்கு ஊக்கமளிக்கும் என்றும் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

யூனியன் பிரதேசங்களின் நிர்வாகிகள் மற்றும் துணைநிலை ஆளுநர்கள், 100 கோடி ரூபாய் வரையிலான திட்டங்களை பரிசீலித்து ஒப்புதல் அளிக்க மத்திய உள்துறை அமைச்சகம் அனுமதி அளித்துள்ளது.

இதுதொடர்பாக உள்துறை அமைச்சகம் பிறப்பித்துள்ள உத்தரவில், 2024ஆம் ஆண்டு இந்திய அதிகாரப்பகிர்வு சட்டத்தின் படி, அந்தமான் நிகோபார், சண்டிகர், தாத்ரா-நகர் ஹவேலி, டாமன் - டையூ, லடாக் மற்றும் லட்சத்தீவு ஆகிய யூனியன் பிரதேசங்களின் நிர்வாகிகளுக்கு இந்த அதிகாரம் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தந்த யூனியன் பிரதேசத்தின் நிதித்துறை செயலாளர், நிதி ஆலோசகருடன் கலந்து ஆலோசித்து, போதுமான பட்ஜெட் ஒதுக்கீடுகளை உறுதி செய்த பின்பு, அனுமதி அளிக்கலாம் என்று அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

பாதுகாப்பான மருந்து தயாரிப்பில் இந்தியா முன்னேற்றம் அடைந்து வருவதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இந்திய மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய அவர், சர்வதேச மருந்து தயாரிப்பு தர வரிசைப் பட்டியலில் 123வது இடத்திலிருந்த இந்தியா, தற்போது 8வது இடத்திற்கு முன்னேறி பெரும் சாதனை படைத்துள்ளதாக கூறினார்.

>>>>>><<<<<<

மும்பை - அஹமதாபாத் இடையேயான புல்லட் ரயில் பாதையில், ஐந்தாவது சுரங்கப்பாதை அமைக்கும் பணி வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மஹாராஷ்ட்ரா மாநிலம், Palghar அருகே நடைபெற்ற நிகழ்ச்சியில், காணொலி வாயிலாக பங்கேற்றுப் பேசிய அவர், இந்த வழித்தடத்தில் ஏழு இடங்களில் மலைகளை குடைந்தும், ஒரு இடத்தில் கடலுக்கு அடியிலும் சுரங்கப்பாதைகள் அமைக்கப்பட்டு வருவதை சுட்டிக்காட்டினார்.

தற்போது ஐந்தாவது சுரங்கம் தோண்டும் பணி முடிவடைந்திருப்பது இந்த திட்டத்தில் முக்கிய மைல் கல்லாக அமைந்துள்ளதாகவும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

பண்டைக்கால நாகரீகங்களிலிருந்து நவீன காலத்திற்கு ஏற்றவாறு இந்தியா முன்னேறி வருவதாக வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

சென்னை ஐ.ஐ.டி. சர்வதேச ஆராய்ச்சி அறக்கட்டளை தொடக்க விழாவில், ஆராய்ச்சியாளர்களுடன் கலந்துரையாடிய அவர், நமது கலாச்சாரம் மற்றும் வரலாற்றை வெளிப்படுத்த வேண்டியது இந்தியர்களின் கடமை என்று கூறினார்.

இது, நமது படைப்பாற்றலை மீள்உருவாக்கம் செய்ய உதவிகரமாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பங்களாதேஷ் பொதுத்தேர்தல் அமைதியாக நடைபெற வேண்டும் என்பதே இந்தியாவின் விருப்பம் என்று குறிப்பிட்ட அவர், உலகளாவிய பன்முகத் தன்மை, ஜனநாயக நற்பண்புகளை நிலைநாட்ட வகை செய்யும் என்றும் தெரிவித்தார்.

குறைந்த அளவிலான ஆதாரங்கள் மூலம் பெரும் பயனை ஏற்படுத்துவது தான் உண்மையாக சவால் என்றும், கோவிட் காலத்தில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட தடுப்பு மருந்து, உலக நாடுகளுக்கு விநியோகிக்கப்பட்டதையும் திரு. ஜெய்சங்கர் சுட்டிக்காட்டினார்.

>>>>>><<<<<<

மேற்குவங்கத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான ஆதாரமாக மாநில அரசால் 2010ஆம் ஆண்டுக்குப் பிறகு வழங்கப்பட்ட இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இந்த சான்றிதழ்களை வழங்கியதில் நடைமுறை சிக்கல் இருப்பதன் காரணமாக, இவை செல்லாது என்று கொல்கத்தா உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, வரைவு வாக்காளர் பட்டியல் குறித்த ஆட்சேபனை மனுக்கள் மீதான விசாரணைக்கு அனுமதிக்க வேண்டும் என்ற திரிணமுல் காங்கிரஸ் வாக்குச்சாவடி முகவர்களின் கோரிக்கையையும் தேர்தல் ஆணையம் நிராகரித்துள்ளது.

>>>>>><<<<<<

சுவிட்சர்லாந்தில் புத்தாண்டு கொண்டாட்டங்களின் போது ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தோர் குடும்பத்தினருக்கு இந்தியா ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சுவிட்சர்லாந்துக்கான இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், Crans - Montana பகுதியில் ஏற்பட்ட இந்த தீ விபத்தில் 40 பேர் உயிரிழந்தது மிகுந்த வேதனையை அளிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த துயரமான தருணத்தில் சுவிட்சர்லாந்து அரசு மற்றும் அந்நாட்டு மக்களுக்கு இந்தியா உறுதுணையாக இருக்கும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

ஈக்வெடாரில் அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, அந்நாட்டு அதிபர் திரு. Daniel Noboa பிறப்பித்துள்ள உத்தரவில், 9 மாகாணங்கள் மற்றும் 3 நகராட்சிப் பகுதிகளில் 60 நாட்களுக்கு அவசர நிலை அமலில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து, உள்நாட்டு பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதன் காரணமாக, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

மேற்கு ஆப்பிரிக்க நாடான Gambia-வில் அகதிகளை ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர்.

96 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

*மேற்கு ஆப்பிரிக்காவிலிருந்து ஸ்பெயின் நாட்டின் Canary தீவுக்கு சென்று கொண்டிருந்த படகில், 200க்கும் மேற்பட்டோர் பயணம் செய்ததாக கூறப்படும் நிலையில், எஞ்சியவர்களை தேடும் பணி முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக காம்பியா பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.*

*>>>>>><<<<<<*

*வடமாநிலங்களில் குளிரின் தாக்கம் அதிகரிக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*தில்லி, ஹரியானா, பஞ்சாப், ஹிமாச்சலப்பிரதேசம் மற்றும் சண்டிகரில் மிக கடும் பனிமூட்டம் நிலவக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*பீஹார், உத்தரபிரதேசம், உத்ராகண்ட், மேற்குவங்கம், சிக்கிம் ஜம்மு கஷ்மீர் மற்றும் லடாக்கிலும் இதேநிலை காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இதனிடையே, கடும் பனிமூட்டம் காரணமாக, 31 ரயில்கள் தாமதமாக இயக்கப்படுவதாக ரயில்வே தெரிவித்துள்ளது*

*>>>>>><<<<<<*

*இம்மாதம் 26ஆம் தேதி புதுதில்லியில் நடைபெறவுள்ள குடியரசு தின அணிவகுப்பில், ராணுவத்தின் விலங்குகள் படைப்பிரிவு முதன்முறையாக இடம்பெறவுள்ளது.*

*Bactrian வகை ஒட்டகங்கள், Zanskar வகை குதிரைகள், ராணுவத்தினரால் வளர்க்கப்படும் இந்திய வகை நாய்கள், மற்றும் Raptor கழுகுகளும் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*நாட்டின் எல்லைப் பாதுகாப்பில் விலங்குகளின் பங்களிப்பை எடுத்துரைக்கும் விதமாக குடியரசு தின அணிவகுப்பில் இவை இடம்பெறவுள்ளதாக ராணுவ செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*>>>>>><<<<<<*

*வதோதராவில் இன்று தொடங்கிய சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Prada Pawar இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*17 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 11-5, 11-9, 11-6 என்ற செட்கணக்கில் Kyati Sharma-வை வென்றார்.*

*Divyanshi Bhowmick, Janvi Garg, Srijani, Hansini Madhan ஆகியோரும் மகளிர் ஒற்றையர் பிரிவில் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*ஆடவர் ஒற்றையர் பிரிவில் ஆதித்யா தாஸ், Sahil Rawat, Satwik Manjunath ஆகியோரும் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.*

*>>>>>>END<<<<<<*